2013 மே 3]

பெற்று உறுப்பினர்கள் கேட்கின்ற இடங்களிலெல்லாம் சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 391, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

391—

நூலகம்

***20568 திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியிலுள்ள சீனிவாசராவ் நினைவு மண்டபத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியிலுள்ள தியாகி பி. சீனிவாசராவ் நினைவு மண்டபத்தில் நூலகம் அமைக்கும் கருத்துரு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1910 ஆம் ஆண்டு கர்நாடகாவில் பிறந்த திரு. பி. சீனிவாசராவ் அவர்கள் 1930, 1931 ஆம் ஆண்டுகளில் சென்னைக்கு

கல்லூரி படிப்பிற்காக வந்தவர்; தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகளின் வேண்டுகோளை ஏற்று, கல்லூரி படிப்பைக் கைவிட்டு தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்; அன்னிய துணியை விற்பனை செய்வதை எதிர்த்தும், கதர் ஆடைகளை அணிய வேண்டுமென்று வலியுறுத்தியும் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டவர்; வெள்ளையர்களின் கடுமையான அடக்குமுறைக்கு ஆளானவர்; பெருந்தலைவர் காமராஜர், பண்டித ஜவஹர்லால் நேரு, இராஜாஜி, நேதாஜி, ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆகிய தலைவர்களோடு இணைந்து செயல்பட்டவர். நாட்டின் விடுதலைக்குப் பிறகு, பண்ணை அடிமைகளாக வாழ்ந்து வந்த விவசாயத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயிகள் சங்க அமைப்பைத் திரட்டி, பண்ணையார் பாதுகாப்புச் சட்டம், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், நில உச்சவரம்புச் சட்டம் போன்ற சட்டங்கள் உருவாக வழிவகுத்தவர்; தலித் சமூகத்தினர் மேலாடை அணியவும், வேலை நேரத்தை முறைப்படுத்திக்கொள்ளவும் வழிவகுத்தவர்; நில உடைமையாளர்களின் சாணிப்பால், சவுக்கடி போன்ற அடக்குமுறைகளையும், பல முறைகளில் நீடித்துவந்த தீண்டாமை செயல்பாடுகளையும் தடுத்து நிறுத்தியவர்; தலித் பிரிவு மக்களை இட ஒதுக்கீடு இல்லாத நேரத்தில், பொதுத் தொகுதியில் நிறுத்தி, அவர்கள் அனைவரையும் வெற்றி பெற வைத்து மக்கள் பிரதிநிதிகளாகச் செயல்பட வைத்து, சமூக நீதியை வென்றெடுத்தவர். இந்த அரிய பணியை தற்கால தலைமுறையினரும், வருங்கால தலைமுறையினரும் தெரிந்துகொள்ளும்வகையில், அவர் எழுதிய நூல்களையும், அவருடைய படங்களையும் கொண்டு, ஒரு சிறப்பு நூலகத்தை அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுக்காக உழைத்த தலைவர்களையும், விடுதலைப் போரில் பங்கேற்ற தியாகிகள் மற்றும் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட தலைவர்களையும் போற்றி, அவர்தம் புகழ் என்றென்றும் நிலைக்கும் வகையில், சாதி, மத பேதமின்றி மணிமண்டபங்கள் அமைத்து, பிறந்த நாள் விழாக்கள் கொண்டாடி, அவர்களுக்குப் பெருமை சேர்த்துக்

2013 மே 3]

கொண்டிருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தியாகி சீனிவாசராவ் அவர்கள் கர்நாடகா மாநிலத்தில் ஏப்ரல் 10, 1907 ஆம் ஆண்டு பிறந்தார். அவர் தனது கல்லூரிக் காலத்தில், நாட்டு விடுதலை உணர்வால் உந்தப்பட்டு, சுதந்திரப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டவர்; 1930—ல் அண்ணல் காந்தியடிகள் தலைமையிலான காங்கிரஸ் கட்சி நடத்திய உப்பு சத்தியாகிரகம், தனி நபர் சத்தியாகிரகம், அன்னிய துணிக் கடை மறியல் போன்றவற்றில் முழுமூச்சுடன் ஈடுபட்டு சிறை சென்றவர்; பிறகு பொதுவுடைமைத் தத்துவத்தின்பால் ஈர்க்கப்பட்டு, அவரது இறுதி காலம் வரை உழைக்கும் அடித்தட்டு மக்களுக்காகப் போராடியவர்; கம்யூனிஸ்டு இயக்கத் தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கீழத்தஞ்சை மாவட்டத்தில் பண்ணை அடிமைகளாக இருந்த விவசாயத் தொழிலாளர்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்காகப் பாடுபட்டவர். சுதந்திரப் போராட்ட வீரரும், விவசாயத் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டவருமான தியாகி சீனிவாசராவ் அவர்கள் மறைந்த பின்னர், அவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட ஊரான திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் அமைக்கப்பட்டுள்ள தியாகி சீனிவாசராவ் நினைவு மண்டபத்தில் நூலகத் துறையிடமிருந்து கருத்துரு கேட்டு, பின்னர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நூலகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நூலகம் அமைக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக வரலாற்றில் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் இன்றைக்கு தேசத் தலைவர்களுக்கும், சுதந்திரப் போராட்டத் தலைவர்களுக்கும் மிகப் பெரிய அளவில் நினைவு மண்டபங்களும்,

மணிமண்டபங்களும் திறக்கப்பட்டிருக்கின்றன. அந்தவகையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட தொடர் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கு மணிமண்டபம்; வெள்ளையனை எதிர்த்துப் போரிட்ட வீரர் தீரன் சின்னமலைக்கு சங்ககிரியில் மணிமண்டபம்; அன்னியனுக்கு அடிபணியமாட்டேன் என்று எதிர்த்துப் போரிட்ட வீரபாண்டிய கட்டப்பொம்மனுக்கு மணிமண்டபம்; வெள்ளையனின் சிம்ம சொப்பனமாக விளங்கிய வீரமங்கை வேலுநாச்சியாருக்கு மணிமண்டபம்; *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. கே. உலகநாதன்: *தமிழக வரலாற்றில் இடம் பிடித்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு சுசீந்திரத்தில் மணிமண்டபம் ஆகிய அறிவிப்புகளைச் செய்து தமிழக மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்றிருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். திருவாரூர் நகரில் தன்னுடைய மகன் பசுவின் கன்றை தேரை ஏற்றிக் கொன்றான் என்ற காரணத்திற்காக பசுவுக்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழன் அவர்களுக்கு சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் சிலை உள்ளது. அதைப்போல அவர் வாழ்ந்த திருவாரூர் மண்ணிலும் அவரது நினைவைப் போற்றுகின்ற வகையில் மணிமண்டபமும், சிலையும் அமைத்துத் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டு அமர்கிறேன், வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஏற்கப்படுகிறது என்பதை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மனுநீதிச் சோழனுக்கு அவர் பிறந்த பூமியிலேயே இந்த அரசால் நினைவு மண்டபம் எழுப்பப்படும், கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2013 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த அறிவிப்புக்கு என் சார்பிலும், திருவாரூர் மாவட்ட மக்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 392, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

392—

புதிய வட்டம்

***6455—திரு. பா. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து வாலாஜாபாத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

உத்தேசிக்கப்படுகிற காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம் அரசாணை எண் 279, வருவாய்த் துறையால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களைப் பூர்த்தி செய்வதால், வாலாஜாபாத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பது குறித்த முழுமையான செயற்குறிப்புகள் பெறப்பட்டவுடன் மேற்சொன்ன வட்டம் பிரிப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.